நிதி
அனுசரணையாளர்

திட்ட
அமுலாக்குநர்

# செயற்றிட்ட செய்திமடல்

## வாழ்கைக்கான நீர்ராகாரத் திட்டம்

## வன்னி ஹோப் நிறுவன்தின் வாழ்க்கைக்கான நீராகார மாணிய உதவித்திட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்




### நிதி அனுசரணையாளர்கள்

1. திரு. ரஞ்சித் அந்தோனிப்பின்ளை –UK
2. திரு. சாய்பிரேமா –AUS
3. திரு. விந்திரன் குடும்பத்தார்- AUS
4. திருமதி துசி மற்றும் சாந்தி துசியந்திரா -AUS
5. திரு. தில்லை நடேசன் - AUS
6. டாக்டர். குஸ்வின் ராஜமணி -AUS
7. திருமதி பாரதா தேவி சபாநடேசர் அவர்களின் ஞாபகார்த்தம் - AUS
8. திருமதி ஈஸ்வரி ஜகநாதன்- AUS

வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி திட்டத்தின் பிரிவின் (Community Development Project) கீழ் அமுலாக்கப்படும் ஒரு திட்டமே வாழ்க்கைகான நீராகரத்திட்டமாகும் (Water For Life Project). இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரஜையும் சுத்தமானதும் பாதுகாப்பானதுமான குடிநீர் தேவையை பெற்றுக் கொள்வதற்கான உரிமையையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க வன்னி ஹோப் நிறுவனம் உத்தரவாதமளிக்கின்றது. இந்த நோக்க அடிப்படையில் மக்கள் சேவை மன்றம் திருகோணமலை மாவட்டத்தில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு மீளக் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் திட்ட முன்மொழிவுகளை ஆறு கட்டங்களாக வன்னி ஹோப்புக்கு சமர்பித்திருந்தது. குறித்த திட்டத்தின் முக்கியத்துவம் கருதி வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனமும் அதன் நிதி அனுசரணையாளர்களும் எமது திட்ட முன்மொழிவுகளை ஏற்றுக் கொண்டு நிதியளித்தனர்.

இந்த திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, குச்சவெளி, தம்பலகாமம் மற்றும் பட்டிணமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றக் கிராமங்களில் இருந்து சுமார் 86 குடிநீர் வசதிகள் அற்ற, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையூடான இலவச குடிநீர் இணைப்புகளை வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

NWSDB மூலம் வழங்கப்படும் குடிநீர் இணைப்பு வசதிகள் நீண்டகால பயன்பாடு கொண்டதும் பாதுகாப்பானதும் ஆரோக்கியமான குடிநீர் வளமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.


| செய்திமடலின் பொருளடக்கம் | 01 திட்ட மேலோட்டமும் நோக்கமும் | 02 திட்ட செயற்பாடுகளும் பெறுபேறுகளும் | 03 வெற்றிக் கதைகள் சம்பவக் கற்கைகள் |
|---|---|---|---|

## இச்செய்திமடல் பற்றி....

மக்கள் சேவை மன்றத்தினால் வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவன வாழ்கைக்கான நீராகத் திட்டத்தின் கீழ் 2020 - 2021 வருடத்திற்கான நன்கொடை மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் விபரங்களை தெளிவுபடுத்தும் நோக்குடன் இந்த செய்திமடலானது மக்கள் சேவை மன்றத்தின் ஊடகப் பிரிவினால் பிரசுரிக்கப்படுகின்ற ஒரு செய்திமடலாகும்.

இந்த செய்திமடல் குறித்த செயற்றிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் விளைவாக ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள், அரச மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஒத்துழைப்புகள், குறித்த திட்டத்தினால் பயன்நுகரிகள் அடைந்த பிரச்சினைகளின் தீர்வுகள், செயற்றிட்டம் அமுலாக்க நடைமுறைகள், உக்திகள், நாம் மேற்கொண்ட சவால்கள், நிதிப் பரிமாற்று செயற்பாடுகளும் சேவை வழங்கலின் போதான வெளிப்படைத் தன்மை மற்றும் வகைகூறும் தன்மை என்பவற்றைப் பிரதிபளிக்கும் வகையில் இந்த செய்திமடலில் உள்ள தகவல்கள் மற்றும் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த செய்திமடலில் உள்ள தகவல்கள் கொடை அனுசரணையாளர்களுக்கும் அரச தனியார் துறை நிறுவனங்களுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுச்சேர்கும் என்பதை நாங்கள் நம்புகின்றோம். இதில் உள்ள ஆக்கங்கள் மக்கள் சேவை மன்றத்திற்கு உரித்தானதாகும்.


### வெளியீட்டுக் குழு

இல. 28, சர்வோதய மத்திய நிலையம், 3ம் கட்டை, உப்புவெளி, திருகோணமலை
Tel: +94 26 3135562 | +94 773587446
E-mail: psc_trinco@yahoo.com
Web: www.pscsrilanka.org


## திட்ட மேலோட்டமும் நோக்கங்களும்



மக்கள் சேவை மன்றத்தினால் அமுல்படுத்தப்பட்ட சுத்தமான குடிநீர் இணைப்பு வசதிகளை வழங்கும் திட்டத்தின் குறிக்கோள் திருகோணமலை மாவட்டத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்தப்பட்ட கிராமங்களில் நீண்டகாலமாக சுத்தமான குடிநீர் வசதிகள் இன்றி வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலம் தனிநபர் குடிநீர் இணைப்புகளை வழங்கி சுத்தமானதும் பாதுகாப்பானதுமான குடிநீர் வசதிகளை வழங்குவதாகும்.

எமது திட்டப் பிரதேசங்களில் உள்ள மீள்குடியேற்றக் கிராமங்களில் குடிநீர் பிரச்சினை மிக நீண்டகாலமாக இருந்து வந்தது. இப்பிரதேசங்களில் பாதுகாப்பானதும் சுத்தமான குடிநீர் இல்லாமையினால் கிட்ணி பாதிப்புகள் அதிகம் நிலவும் பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சுத்தமானகுடிநீரினைப் பெற்றக் கொள்வதற்கு மிக நீண்ட துாரம் சென்று (நகர் பகுதிகளுக்கு) குடிநீரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருந்து வந்தது. அத்தோடு சில இடங்களில் பிரதேச சபையினாலும் இராணவத்தினாலும் பவுசர்கள் மூலமும் குடிநீர் விநியோகம் நடைபெற்று வந்தது. இது குறித்த பிரதேச மக்களுக்கு போதுமானதாகவும் திருப்பிதியானதாகவும் காணப்படவில்லை. இந்த வழிமுறை மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியிருந்தது.

சுத்தமான குடிநீர் வசதிகள் இன்மையால் பல குடும்பங்கள் இன்னும் மீள்குடிறேப்படாமல் உள்ளார்கள். அத்தோடு பாதுகாப்பற்ற நீரினைப் பயன்படுத்துவதானால் நோய் ஏற்பட்டு பல மரணங்கள் ஏற்பட்டதுடன் அதிக எண்ணிக்கையான நபர்கள் கிட்ணி நோய்க்கும் உள்ளாகியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு மக்கள் சேவை மன்றம் வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுமார் 86 வறிய குடும்பங்களுக்கு முதற்கட்ட சுற்றில் குடிநீர் இணைப்பு வசதிகளை இலவசமாக வழங்கியது.

# திட்டத்தின் வெளியீடும் சமுக மாற்றங்களும்






வன்னி ஹோப் நிறுவன அனுசரணையில் மக்கள் சேவை மன்றத்தினால் அமுலாக்கப்பட்ட சுத்தமான குடிநீர் திட்டத்தின் கீழ் சுமார் 86 குடும்பங்கள் பாதுகாப்பானதும் சுத்தமானதுமான குடிநீர் பாவிக்கும் நிலையில் உள்ளனர். இந்த 86 குடும்பங்களும் கடந்த கால யுத்தம் காரணமாக சொந்த இடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்தவர்கள். யுத்தம் காரணமாக பொருளாதாரங்களை இழந்தவர்கள். இவர்களின் வாழ்வாதாரம் மிகவும் கீழ்மட்டதிற்கு தள்ளப்பட்டது. இவ்வாறானவர்கள் மீள குடியமர்தப்பட்டதும் அவர்களின் சமூகப் பொருளாதார நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்ய முடியாத சூழலில் வாழ்ந்தார்கள்.

எமது செயற்றிட்டத்தின் கீழ் சுமார் 86 குடும்பங்கள் ஏறத்தாழ 500 இற்கும் மேற்பட்ட தனிநபர்கள் சுத்தமான குடிநீரைப் பயன்படுத்தும் சந்தர்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. அத்தோடு அதிக செலவுகள் மூலம் குடிநீரைப் பெற்றுக் கொண்டிருந்த நிலை தற்போது அந்த நிலமை நீங்கியுள்ளதுடன் ஆரோக்கியமானதும் நிலைபேறான குடிநீர் பாவனை முறை சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உவர் தன்மை நிறைந்த ஆரோக்கியமற்ற குடிநீர் பாவனையில் வாழ்ந்த மக்கள் சுத்தமானதும் ஆரோக்கியமானதுமான குடிநீர் பாவனை முறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதனால் நீர் மூலம் ஏற்படும் பேராபத்துக்கள் மற்றும் கிட்னி நோய் போன்ற இடர்களில் குறித்த குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர் என்பது எமது திட்ட வெற்றியின் ஒரு மைல்கற்கள் எனலாம். இதன் மூலம் எதிர்கால சந்தியினர் ஆரோக்கியமான வாழ்வுக்கான ஒரு நகர்வினை அடைந்துவிட்டார்கள் என்று கூறலாம்.

## நிதி அனுசரணையாயளர்களும் வழங்கப்பட்ட உதவிகளும்

| இல | அனுசரணையாளர் பெயர் | தேசம் / நாடு | வழங்கப்பட்ட குடிநீர்இணைப்புகள் எண்ணிக்கை | நன்கொடை (ரூ.) | திட்ட கட்டம் |
|---|---|---|---|---|---|
| 01 | Malalesegara Foundation | Sri Lanka | 17 | 412,220.00 | Phase V |
| 02 | Gandhi Illam New Zealand Tamil Trust | New Zealand | 12 | 256,720.00 | Phase IV(A) |
| 03 | Ranjith Anthonypillai | UK | 10 | 192,350.00 | Phase I |
| 04 | Vindran & Family | Australia | 10 | 212,381.00 | Phase II |
| 05 | Eeswary Jeganathan, | Australia | 03 | | Phase III |
| 06 | Thillai Nadesan | Australia | 05 | 196,817.00 | Phase III |
| 07 | Dr.Kushwin Rajamani | Australia | 02 | | Phase III |
| 08 | IN the memory of Bharata devei Sabarandeskar | Australia | 15 | 313,400.00 | Phase IV(B) |
| 09 | Sai Prema | Australia | 06 | 268,590.00 | Phase VI |
| 10 | Dushy & Shanthi Dushyanthira | Australia | 06 | | Phase VI |

# Water for Life திட்டத்தின் கீழ் மேற்கொண்ட முக்கிய செயற்பாடுகளும் அதன் பெறுபேறுகளும்




வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மக்கள் சேவை மன்றத்தினால் அமுல்படுத்தப்பட்ட சுத்தமான குடிநீர் குழாய் நீர் இணைப்பு வசதிகளை வழங்கும் செயற்றிட்டத்தின் பல முக்கிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் சுருக்கப்பகுப்பாய்வை தருகின்றோம்.

இந்த செயற்றிட்டம் வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்தில் பல்துறை சார்ந்த நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக்கள் பங்களிப்புடனும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தொழிநுட்ப ஒத்துழைப்புடனும் இந்த திட்டம் அமுலாக்கப்பட்டது.

### முக்கிய செயற்பாடுகள்




**பயனாளிகள் தெரிவு:** குடிநீர் தேவையுடைய குடும்பங்களின் விபரங்களை அங்கீகரிக்கப்பட்ட சமூகமட்ட அமைப்புகள் ஊடாக பெறப்பட்டது. இந்த கோரிக்கைகள் குறித்த அரச அலுவலரின் சிபாரிசுடனும் அனுமதியுடனும் பெறப்பட்டது. பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் அடிப்படையில் பரிசீலனை செய்து எமது விண்ணப்ப படிவங்கள் கேரிக்கப்பட்டு கோவைப்படுத்தப்பட்டன.

**குடிநீர் இணைப்புக்கான விண்ணப்பங்களை சமர்பித்தல்**
குடிநீர் இணைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ஒவ்வொரு பயனாளியும் சமர்பிக்க வேண்டும். மூன்று விண்ணப்ப படிவங்களுடன் ஐந்து இணைப்பு ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். வசதி குறைந்த போட்டோ பிரதி வசதிகள் குறைந்த இடங்களில் இந்த துணை ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கியதால் எமது நிறுவனம் மூலம் விண்ணப்பங்களை தயாரிப்பதற்கான ஆலோசனை சேவைகளை சில கிராமங்களுக்கு தொண்டர்கள் மூலம் இலகுபடுத்தல் சேவைகளை வழங்கினோம்.

**சாத்திய நிலையறிவதற்கான விஜயம் மேற்கொள்ளல்:**
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை விண்ணப்பங்களை பொறுப்பேற்றுக் கொண்டவுடன் விண்ணப்பதாரியின் இட அமைவிடத்தினை ஆராய்வதற்கான சாத்திய நிலையை அறிக்கையிடுவதற்கான செயற்பாடுகளை தேசிய வடிகாலமைப்புச் சபையுடன் மேற்கொண்டோம்.

**இணைப்பு பட்டியலுக்கான கட்டணம் செலுத்தல்:**
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாத்திய நிலை அறிக்கைக்கு இணங்க குடிநீர் இணைப்புக்கான ஆரம்ப கட்டணப் பட்டியல் எமக்கு கிடைக்கப் பெற்ற ஒழுங்கில் கட்டணம் செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பயனாளிகளிடம் பற்றுச் சீட்டு ஒப்படைக்கப்பட்டது.

**வீதியோர அகழி வெட்டுவதந்கான அனுமதி பெறல்:**
கட்டணப் பட்டியல் செலுத்தப்பட்டவர்களுக்கான குடிநீர் இணைப்பு வழங்க அகழி வெட்டுவதற்கான அனுமதி பிரதேச சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கப்பட்டது. இதற்கிணங்க குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டது.

**குடிநீர் இணைப்பு வழங்கல்:**
குடிநீர் இணைப்புக்கான கட்டணம் செலுத்தப்பட்ட பயனாளிகளுக்கு குடிநீர் இணைப்பு வசதிகள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது எமது பயனாளிகளுக்கு துரித கதியில் வழங்குவதற்கு குறித்த பயனாளிகளின் பங்களிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

**முகாமைத்தவக் கன்காணிப்பும் ஆவணப்படுத்தல்**
எமது நிறுவனத்தின் முகாமைத்துவ கண்காணிப்பு பொறிமுறை தொடரச்சியாக இருந்து வந்தது. மேலும் குடிநீர் இணைப்பு வசதிகள் வழங்கிய குடும்பங்களுக்கு நிறுவனத்தின் காட்சிப் பலகை பொருத்தப்பட்டு புகைப்படங்கள் கேரிக்கப்பட்டது. மேலும் பயனாளிகளிகளுக்கு திட்ட நிறைவேற்று சான்றிதழ் வழங்கப்பட்டது.

# Water for Life
# திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட ஏனைய செயற்பாடுகள்






வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அமுலாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தில் தனிநபர் குடிநீர் இணைப்பு வழங்குதல் திட்டத்துடன் மேலதிகமான மற்றொறு விசேட திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டது.

மூதூர் பிரதேசத்தில் உள்ள பழங்குடி கிராமங்களான நல்லூர் மற்றும் தாயிப் நகர் கிராமங்களில் மிக நீண்டகாலங்களாக குடிநீர் பொதுக் குழாய் வழங்கப்படாமல் இருந்தது. அதனால் மக்கள் குடிநீர் பாவனை தொடர்பில் பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்கினர். இந்த விடயம் தொடர்பாக தாயிப் நகர், நல்லூர் கிராம அபிவிருத்திச் சங்கம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் பிரதான குழாய் நீர் பொருத்தும் வேலைத்திட்ட்தினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையூடாக மேற்கொண்டோம். சுமார் 1200 கிலோ மீற்றர் தூரம் பிரதான குடிநீர் பொதுக் குழாய் பொருத்தப்பட்டு குறித்த கிராமங்களுக்கு குடிநீர் பெறும் மார்கம் நிறைவேவற்றப்பட்டது. சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் சுத்தமானதும் பாதுகாப்பானதுமான குடிநீர் தேவையுடைய மக்களுக்கு இதன் குடிநீர் பெறும் மார்க்கம் கிடைக்கப்பெற்றது.

இந்த விசேட திட்டத்தின் மூலம் சுமார் 100 குடும்பங்களுக்கு மேல் நன்மையடைவதுடன் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் குடியேறாமல் காணப்படுகின்ற குடும்பங்கள் எதிர்காலத்தில் சொந்த கிராமங்களுக்கு குடியேறி வாழுவதற்கான சூழல் கிடக்கும்.
இந்த விசேட செயற்றிட்டத்திற்கு வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனதின் ஊடாக அவுஸ்ரேலியாவில் வசித்து வரும் வைத்திய கலாநிதியும் பிரபல சமூக ஆர்வலருமான டாக்டர் குஸ்வின் இராஜமணி முழு நிதியுவினையுயும் வழங்கி மக்களின் நீண்டகால குடிநீர் தேவையை பூர்த்தி செய்த பெருமையை இவர் சொந்தமாக்கி கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிராமிய பாடசாலை ஒன்றுக்கு குடிநீர் சேகரிப்பு தாங்கிகள் வழங்கி வைவப்பு



வன்னி ஹோப் அவஸ்ரேலியா நிறுவனத்தினால் Water fro Life திட்டத்தின் கீழ் மக்கள் சேவை மன்றத்தினால் அமுலாக்கப்பட்ட மற்றொரு விசேட செயற்றிடம் குச்வெளி கோட்டக் கல்வி வலயத்திற்குட்பட்ட இறக்கக்கண்டி அல்-ஹம்றா பாடசாலைக்கு குடிநீர் சேகரிப்பு தாங்கிகள் இரண்டு வழங்கி வைக்கப்பட்டது.

வறட்சி காலங்களில் பாடசாலை மாணவர்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான பாரிய அசௌகரியங்களை எதிர் நோக்கினர். இந்த அசௌகரிய நிலமைய கருத்திற் கொண்டு மக்கள் சேவை மன்றத்தினால் வன்னி ஹோப் மூலம் 1000 லீற்றர் கொள்ளவு கொண்ட இரு குடிநீர் சேகரிப்பு தாங்கிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த உதவி மூலம் சுமார் 600 வறிய கிரமப்புர மாணவர்கள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தனர். வன்னி ஹோபின் விசேட உதவித் திட்டங்கள் மூலம் பலயிரக்கணக்கான மாணவர்கள் அனுகூலமடைந்து வருகின்றனர் என்பது விசேட அம்சமாகும்.

## தலைவரின் வாழ்த்துச் செய்தி




மக்கள் சேவை மன்றத்தினால் பிரசுரிக்கப்படும் இந்த செய்திமடல் ஊடாக வாழ்த்து தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மக்கள் சேவை மன்றம் கடந்த 2020 ஆம் வருடத் வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் வாழ்கைக்கான குடிநீர் உதவித்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் வசதிளை வழங்கும் செயற்றிட்டம் ஒன்றை அமுல்படுத்தியிருந்தோம். இந்த செயற்றிட்டம் மூலம் சுமார் 86 வறிய மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களின் பாதுகாப்பான குடிநீர் வசதளை பெற்றுக் கொடுத்து நீண்டகாலமாக இருந்த குடிநீர் பிரச்சிணைகளுக்கு தீர்வுகாணப்பட்டது.

இந்த செயற்றிட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்கிய வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்திற்கும், தனிப்பட்ட அனுசரணை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் பிரதேச சமூக மட்ட நிறுவனங்கள் மற்றும் ஏனைய உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் மிகுந்த நன்றியையும் பாராட்டையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்குறித்த நிறுவனங்களின் பங்கேற்புடன் பயனாளிகளின் பங்குபற்றுதலுடனும் குறித்த திட்டத்தினை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது என்பதை இங்கு விசேடமாக குறிப்பிட விரும்புகின்றேன்.

மு.தா. முகம்மது பாரிஸ்
தலைவர்,
மக்கள் சேவை மன்றம்

# திட்ட சம்பவக் கற்கைளும் வெற்றிக் கதைகளும்






திருகோணமலை கப்பல்துறை கிராமத்தில் வசிக்கும் ஜெயலட்சுமி குடிநீர் இணைப்பு வழங்கிய உதவி பற்றி குறிப்பிடுகையில், "….. நான் எனது மகனுடன் வாழந்து வருகின்றேன். எனக்கு 72 வயதாகின்றது. நாங்கள் யுத்தம் காரணமாக இடம்பெர்ந்து இந்த கிராமத்திற்கு மீள குடியேறினோம். நாங்கள் மீள்குடியேறி சுமார் 20 வருடங்களுக்கு மேலாகி சுத்தமான குடிநீர் வசதிகள் இன்றி மிகுந்த சிரமப்பட்டோம். குடிப்பதற்கு தொலைதுூரத்திற்கு சென்று கேன் மூலம் தண்ணீர் எடுத்து வரும் வாழ்க்கையை கண்டு வந்தோம். கடவுள் உதவியால் எங்கேயிருந்தோ எங்களது கஸ்டங்ளை உணர்ந்து சுத்தமான பாதுகாப்பான குடிநீரை எமது வீட்டுக்குள்ளே எடுத்து பருகுவதற்கு உதவி செய்த வன்னி ஹோப் நிறுவனம் மக்கள் சேவை மன்றம் நிறுவனங்களுக்கு கோடான கோடி நன்றிகள். இந்த செயலுக்கு கடவுள் உங்களுக்கு இன்னும் கருணை காட்டுவார்……" என மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்தினார் ஜெயலட்சுமி அம்மையார்.



என்னுடைய பெயர் அனீஸா. எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். எனது கனவர் சிறுநீரக நோய் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு ஒரு காலையும் இழந்த நிலையில் வீல் செயரரில் வைத்து நானே பராமரித்து வருகின்றேன். நான் இக்பால் நகர் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றேன். இங்கு கிணறுகள் சவர் வாய்ந்ததும், பாதுகாப்பற்றதுமாகும். சுத்தமான குடிநீர் பெற தொலை துாரத்திற்குச் செல்ல வேண்டும். இதனால் நானும் எனது குடும்பமும் மிகவும் கஸ்டப்பட்டோம். இந்த நிலமயை அறிந்து திருகோணமலை மக்கள் சேவை மன்றம் ஊடாக வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தினால் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டது. இந்த உதவியை கடல் கடந்து வாழும் நமது அன்பு உறவுகள் செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் என்றுமே நன்றியுள்ளவர்களாக இருப்போம். அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் கடவுள் ஆரோக்கி வாழ்வையும் மகிழ்ச்சியான வாழ்க்கையையும் வழங்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்…." என குடிநீர் உதவியைப் பெற்ற அணிஸா மற்றும் அவரின் குடும்பத்தார் கூறினர்.